# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:**160 **தேதி:**-04.04.2017

### 01.10.2000க்குப் பின் நிரந்தரமாக்கப்பட்ட TSMகளுக்கு NEPP மற்றும் சில செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

01.10.2000க்குப் பின் நிரந்தரமாக்கப்பட்ட TSMகளை BSNL ஊழியர் சங்கம் தனது கடுமையான முயற்சிகளின் காரணமாக DOTயில் பணியமர்த்தப்பட்டவர்களாக நிர்வாகம் அறிவித்தது. ஆனால் NEPP திட்டத்தின் அடிப்படையிலான பதவி உயர்விற்கு அவர்களை BSNLல் பணியமர்த்தப்பட்டவர்களாக முடிவு செய்தது. எனவே அவர்களுக்கு நான்கு ஆண்டுகளுக்கு பதிலாக 8 ஆண்டுகள் கழித்தே முதல் பதவி உயர்வு கிடைத்துவருகிறது. இவர்கள் DOTயில் பணியமர்த்தப்பட்டவர்கள் என்பதால் இவர்களுக்கு முதல் பதவி உயர்வு தரப்பட வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கோரியது. ஆனால் நிர்வாகம் இதனை ஏற்க மறுத்தது. பாதிக்கப்பட்ட சில தோழர்கள் நீதிமன்றத்திற்கு சென்றனர். பஞ்சாப் மற்றும் ஹிமாச்சல் பிரதேச உயர் நீதிமன்றங்கள் இவர்கள் DOTயில் பணியமர்த்தப்பட்டவர்கள் என்பதால் நான்கு ஆண்டுகளில் முதல் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றமும் இதனை உறுதி செய்துள்ளது. இந்த சூழ்நிலையில் இந்த உத்தரவை நீதிமன்றத்திற்கு சென்றவர்களுக்கு மட்டும் என வரையறுக்கக் கூடாது எனவும், 01.10.2000க்கு பின் நிரந்தரமாக்கப்பட்ட அனைத்து TSMகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. இது கார்ப்பரேட் நிர்வாகத்தின் தீவிர பரிசீலனையில் உள்ளது. வெகு விரைவில் சாதகமான முடிவு வரும் என எதிர்பார்க்கலாம்.

**நேரடி நியமன JEக்களுக்கு பயிற்சி**:- நேரடி நியமன JEக்களுக்கு சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு மார்ச் 15ஆம் தேதி இறுதி நாள் என BSNL கார்ப்பரேட் அலுவலகம் முடிவு செய்திருந்தது. சான்றிதழ் சரிபார்ப்பு ஒரு சில மாநிலங்களை தவிர அனைத்து மாநிலங்களிலும் நிறைவு பெற்று விட்டதாக BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு 03.04.2017 அன்று GM(Rectt) திருமிகு அனிமா ராய் அவர்களை சந்தித்தபோது தெரிவித்தார். இதர மாநிலங்களும் கார்ப்பரேட் அலுவலகத்தில் இருந்து சில விளக்கங்களை கேட்டுள்ளதாகவும் தெரிவித்தார். ஒரு வார காலத்திற்குள் இதர மாநிலங்களிலும் சான்றிதழ் சரிபார்ப்பு நிறைவு பெற்றுவிடும் என்றும் அதற்கு பின் தேர்வு பெற்றவர்கள் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள் எனவும் GM(Rectt) தெரிவித்துள்ளார்.

**நேரடி நியமன JEக்கள் தேர்வு பட்டியல்:-** BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு 03.04.2017 அன்று GM(Rectt) திருமிகு அனிமா ராய் அவர்களை சந்தித்த போது இரண்டாவது பட்டியலில் இடம் பெறாத முதல் பட்டியலில் இடம்பெற்ற தேர்வாளர்களையும் பணியமர்த்தப்பட வேண்டும் என நமது கோரிக்கையினை வலியுறுத்தினார். இதற்கு சாதகமாக பதிலளித்த GM(Rectt), சான்றிதழ் சரிபார்ப்பு முடிந்த பின் போதிய காலியிடங்கள் இருந்தது என்று சொன்னால் விடுபட்ட தேர்வாளர்களுக்கு பணி நியமனம் தொடர்பாக பரிசீலிக்கலாம் என்று தெரிவித்தார். இந்த பணியினை விரைவு படுத்த வேண்டும் என நமது பொது செயலாளர் கேட்டுக் கொண்டார்.

**மேற்கு வங்க CGM கவுஹாத்திக்கு மாற்றம்**:- மேற்கு வங்க மாநிலத்தில் திரிணாமுல் குண்டர்களை பயன்படுத்தி BSNL ஊழியர் சங்கத்தின் மீது தாக்குதலை தொடுத்த மேற்குவங்க CGM திரு R.N.ஜா மேற்கு வங்கத்திலிருந்து மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவர் கவுஹாத்தியில் உள்ள NORTH EAST TASK FORCEல் பணியமர்த்தப்பட்டுள்ளார். இந்த நடவடிக்கையினை எடுத்த BSNL CMDக்கு நமது மத்திய சங்கம் நன்றியை தெரிவித்துள்ளது.

**விலைவாசி குறைந்துவிட்டதாம்(!):-** 01.04.2017 முதல் 119.5%லிருந்து 117.2%ஆக IDA குறைந்துள்ளது. சந்தையில் எந்த ஒரு அத்தியாவசியப் பொருளின் விலையும் குறையவில்லை. ஆனால் மோடி அரசாங்கத்தின் புள்ளி விவரங்கள் விலைகள் குறைந்து விட்டதாக தெரிவிக்கின்றது. இதை நாம் நம்பியே தீரவேண்டுமாம்(!).

**BSNL-MTNLஇணைப்பு :-** BSNL-MTNL இணைப்பு தொடர்பாக BSNL ஊழியர் சங்கம் பாரத பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தது. இந்த இணைப்பு நடைபெறுவதற்கு முன் BSNL மற்றும் அதன் ஊழியர்களின் நலன்கள் பாதிக்கப்படாமல் இருக்க நமது சங்கம் முன்வைத்துள்ள கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கோரியிருந்தது. பாரத பிரதமரின் அலுவலகம் இந்த கடிதத்தை DOTயின் செயலாளருக்கு அனுப்பி, அதன் மீது பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு BSNL ஊழியர் சங்கத்திற்கு தகவல் தர வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**